புதுமலர்: 08 —— ஆடி - ஆவணி —— இதழ்: 04

# அனல்

இணை ஆசிரியர்கள்

- யோ.நிக்ஷன்
- வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.07.2011

# பொருளடக்கம்


* அனலின் குரல்
* கதையும் கற்றதும் - தேவன் பார்த்துக்கொள்வார்
* ஏன் ஜெபிக்க வேண்டும்
* நான் மிகவும் அழுதேன்
* வாலிபர் வளாகம் - ரூத்
* வினா விடை - 46
* நற்செய்தி - சாம்பலில் இருந்தது போதும்
* பக்தர்களின் பயிலகம்
* அருட்பணியாளர் சரிதை
* மூவரி முத்துக்கள்
* அனலின் ஆன்மீக விருந்து
* குறுக்கெழுத்துப்போட்டி - 44


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*ஆசிரியர் "அனல்",*
*347 நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். இலங்கை.*

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


***திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11***

# அனலின் குரல்



கிறிஸ்துவுக்குள் அன்பான வாசக உள்ளங்களே!


இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். தந்தையைப்போல சுமக்கிற, தாயைப்போல அணைக்கிற, நண்பனைப்போல உறவாடுகின்ற தேவன்: உங்களையும் அறிந்தவராகவே இருக்கின்றார்.

**யோவான் 2:25இன் படி ஆண்டவருக்கு ஒவ்வொரு மனிதனின் இருதயமும் வெளிப்படையாகவே தெரியும். அந்த வகையிலே உங்களுடைய சகல வேதனைகளையும் அவர் புரிந்து கொள்ளக் கூடியவர். அத்துடன் அவரும் எம்மைவிட அதிகமான பாடுகளை அனுபவித்தவர்.**

**எனவே உங்கள் நிலைமை அவருக்கு நன்றாகவே தெரியும். கர்த்தருக்கு உங்கள் பெருமூச்சுக் கூடத் தெரியும். நீங்கள் உங்களை அந்த இயேசுவின் கரங்களில் ஒப்புக்கொடுங்கள். உங்கள் வாழ்வில் பெரிய அற்புதங்களைக் காண்பீர்கள்.**




ஆசிரியர்








# தேவன் பார்த்துக் கொள்வார்!!



**ஒ**ருமுறை பிரபல்யமான ஓவியர் ஒருவர் அந்த நாட்டின் இளவரசிக்கு பரிசளிப்பதற்கென ஒரு ஓவியத்தை வரைந்து கொண்டிருந்தார். தனது கற்பனை திறமை எல்லாவற்றையும் ஒருமுகப் படுத்தி அழகான அந்த ஓவியத்தை உரு வாக்கிக் கொண்டிருந்தார். **அந்த முயற்சி யின் பலனாக மிகவும் அழகான அந்த ஓவியம் உருவானது. தான் முன்பு எத்த னையோ விதவிதமான ஓவியங்களை வரைந்து இருந்தாலும் இது அவை எல்லாவற்றையும் விட அழகாகவும் விசேஷமாகவும் இருப்பதை அந்த ஓவியரே உணர்ந்து கொண்டார்.**

மலைகள், மரங்கள், செடிகள் என நாலாபுறமும் அவரைச் சூழ்ந்திருந்த இயற்கை அழகின் மத்தியில் தனது ஓவியத்தின் அழகையும் வண்ணத்தையும் பார்த்த போது மெய்சிலிர்த்துப் போனார் அந்த ஓவியர். பல கோணங்களிலும் நின்று தனது ஓவியத்தை ரசித்த அந்த ஓவியர், அந்த ஓவியத்தின் அழகை சற்று துாரத்தில் நின்று அவதானிக்க எத்தனித்தவராய் பின்னோக்கி நடந்தார். தனது கற்பனையில் உதயமான அந்த ஓவியத்தின் அழகினால் மெய்மறந்தவராய் பின்னோக்கி நகர்ந்து சென்றவர். தான் நின்றிருந்த மாடியின் எல்லைக்கு வந்ததை உணராதிருந்தார். **இன்னும் ஒருசில அடிகளில் பெரிய ஆபத்து காத்திருந்தது. ஆனால் அதை உணரும் மனநிலையோ அந்த ஓவியருக்கு அந்தக் கணம் இருக்கவில்லை!!.**

திடீரென அங்கே அந்த மாடியிலே நின்று இயற்கையின் அழகை ரசித்துக் கொண்டிருந்த ஒரு நபர் சற்றும் எதிர்பாராத விதமாக இந்த ஓவியரைத் திரும்பி பார்த்தார். **அந்த ஓவியர் எதிர்நோக்கியிருந்த ஆபத்தைக் கண்டு திடுக்கிட்டுப்போனார்.** அந்த ஓவியரின் பெயரைச

சொல்லிக் கூப்பிட எத்தனித்தவர், தான் அவ்வாறு உரத்துக் கூப்பிட்டால் அந்த ஓவியர் திடுக்கிட்டுப்போய் தடுமாறி கீழே விழுந்துவிடக்கூடும் என்பதனை புரிந்து கொண்டார். ஒரு கணம் யோசித்த அந்த நபர் அந்த ஓவியத்தை நோக்கி ஓடினார். அங்கே இருந்த வண்ணங்களைக் கொண்டு அந்த அழகிய ஓவியத்தின் மேல் தாறுமாறாக பூசினார். இதை சற்றும் எதிர்பார்க்காத அந்த ஓவியர் அதிர்ச்சியும் கோபமும் அடைந்தவராய் அந்த நபரை நோக்கி ஓடி வந்து அவரை அடித்துத் தாக்க முற்பட்டார். அப்போது அங்கே நின்ற மற்றவர்கள் ஓடிவந்து அவரை தடுத்து அங்கே நடக்க இருந்த ஆபத்தையும் அவருக்கு ஏற்பட இருந்த சேதத்தையும் குறித்து அவருக்கு விளக்கமளித்தனர். அந்த ஓவியர் மனங்கலங்கிப் போய் திகைத்து நின்றார். தனது கற்பனையில் உருவான அந்த அழகிய ஓவியம் அழிக்கப்பட்டாலும் அதனூடாக ஏற்பட்ட நன்மையை அவரால் உணர முடிந்தது.

**இதே போன்று தான் நாமும் பல வேளைகளில் எம் கற்பனையிலே எமது திட்டங்களை, எதிர்காலம் எல்லாவற்றையும் அழகாக வரைந்து வைத்திருப்போம். ஆனால் திடீரென அவைகள் கிறுக்கப்பட்டு போனது போலவும் நாம் நினைத்த சந்தோஷத்தை அளிக்காதது போலவும் தோன்றும். ஆம்! எம் பரம பிதா எம்மை நினைத்திருக்கிறார். அவர் எல்லாக் காரியங்களையும் எமது நன்மைக்கே செய்வார். எமது திட்டங்களினால் எமக்கு ஆபத்து நேரிட இருந்தால் அவர் அதைக் கண்டும் காணாதவர் போல இருப்பவர் அல்ல. எம்மை நிச்சயம் காப்பாற்றுகின்ற ஆண்டவர் அவர். சிலவேளைகளில் நடைபெறும் காரியங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவும் கிரகிக்க முடியாதவையாகவும் இருக்கும். ஆனாலும் தேவன் தன்னில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலத்தையும் நன்மைக் கேதுவாக செய்து முடிப்பார். அவர் தாமதித்தாலும் தனது பிள்ளைகளுக்கு திறமையான, விசேஷமான நன்மைகளை நிச்சயம் தருவார்.**

**கெ. இன்பரூபன்**

## வினாவிடை - 45 சரியான விடை எழுதியவர்கள்

01. ஜீ.ஜீபிகா - மானிப்பாய்
02. ஹ.விஜிதா - மானிப்பாய்
03. க.பரிமளா - திருநகர்
04. சி.சாமுவேல்மெறிஸ் - மானிப்பாய்
05. சி.பியூலா - மானிப்பாய்
06. சூ.ஜான்சி - நாவற்குழி
07. எச்.இவாஞ்சலின் - மானிப்பாய்
08. து.கிரிசாந் - ஊர்காவற்றுறை
09. தி.கலைக்குமரன் - புன்னாலைக்கட்டுவன்
10. து.கிருஷ்ணகுமார் - ஊர்காவற்றுறை
11. பா.தர்சினி - காரைநகர்
12. பா.கோமதி - காரைநகர்
13. ம.டயானி - பாண்டவெட்டை
14. பா.வதனி - காரைநகர்
15. பா.மோகன் - காரைநகர்
16. ப.மேரிசாந்தி - திருநெல்வேலி
17. தி.ஜெகா - மயிலங்காடு
18. பா.டிலானி - காரைநகர்
19. எம்.றீகா - ஊர்காவற்றுறை
20. ம.மேரிஜஸ்ரீனா - ஊர்காவற்றுறை
21. து.நிஷ்சன் - ஊர்காவற்றுறை
22. வி.நிதர்சன் - ஊர்காவற்றுறை
23. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
24. வி.கலியுகன் - ஊர்காவற்றுறை
25. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
26. து.டானியல் - ஊர்காவற்றுறை

# ஏன் ஜெபிக்க வேண்டும்?

- ஜெபிக்கும் சபை வளரும்: வளரும் சபை ஜெபிக்கும்.
- ஜெபிக்கிறவர்கள் அதிகம் ஜெபம் குறித்து பேசமாட்டார்கள்:ஜெபிப்பார்கள்.
- ஜெபம் இல்லாதவர்களின் ஆராதனையும் துதியும் வறண்ட நிலத்தின் கறாளைச் செடியின் வாசனையே.
- ஜெபத்தை மறக்கும் விசுவாசிகளும், ஊழியர்களும், சபையும் தேவனால் கைவிடப்படும் நிலையின் ஆரம்பத்தில் உள்ளனர்.
- சில நிமிட ஜெபப்பழக்கங்கள் சூரியன் கண்ட பனி போல் போய்விடும்.
- ஜெபமே ஜீவனானால் ஜெயமே சரித்திரமாகும்.
- ஜெபம் என்பது ஓர் ஆழமான ஆத்மார்த்தமான உறவு.
- ஜெபம் ஓர் தொடர்ச்சியான செயலின் விளைவின் முடிவே ஆகும்.
- ஜெபிக்கிறவர் பேசினால் ஜெபியாதவரும் ஜெபிக்க ஆசைப்படுவார்.






**நா**ம் பிறந்தது முதல் மரிக்கும் வரை எம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் பின்னிப்பிணைந்தது அழுகை என்றால் மிகவும் பொருத்தமானதாகும். குழந்தையாய் இருக்கும் போது எல்லாக் காரியத்திற்கும் அழுவோம். சற்று வளர்ந்ததும் எமக்கு வேண்டிய காரியங்களுக்கு அடம் பிடித்து அழுவோம். இன்னும் சிறிது வளர்ந்தபின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லை என அழுவோம். அதையும் தாண்டி செல்கின்ற போது எமக்கு பிரியமானவர்களின் பிரிவு நம்மை அழ வைக்கும். அதையும் கடந்து பார்க்கும் போது அழாமல் இருக்க ஒரு அழுகை.

கவனியுங்கள், பரிசுத்த வேதாகமம் நமக்கு காண்பிக்கின்றது. **பிதாவுடைய வலது கரத்தில் இருந்து புஸ்தகத்தை வாங்கவும் அதற்குள் உள்ள காரியங்களை திறந்து வாசிக்கவும் அறிந்து கொள்ளவும், வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழாவது ஒருவரும் பாத்திரவானாக காணப்படவில்லை. இதனைக் கண்ட அப்போஸ்தலனாகிய யோவான் மிகவும் அழுதேன்** என்பதனை சொல்கின்றார்.

**நீ அழவேண்டாம் யூதா கோத்திரத்து சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தை திறக்கவும் முத்திரைகளை உடைக்கவும் ஜெயம் கொண்டிருக்கிறார் (வெளிப்படுத்தல் 5:5) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சர்வலோகத்துக்குமாக அடிக்கப்பட்டு நம்முடைய பாவங்களை சுமந்து தீர்த்து ஜெயம் எடுத்தவராக இருக்கின்றார். எங்களை தேவனுக்கென்று தம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டார்.**

**பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையில் இது இன்னும் நடக்கவில்லையே, யார் இதை செய்யப்போகின்றார்கள், ஒருவராலும் முடியவில்லையே என கண்ணீரோடு நாட்களை செலுத்துகின்றாயா? இன்று ஆண்டவர் உனக்கு சொல்லுகிறார், நீ அழவேண்டாம், அழவேண்டாம். ஜெயம் எடுத்த ஜெயக் கிறிஸ்து பக்கம் உன் வாழ்வை அர்ப்பணிப்பீராக, ஜெயம் உண்டாவதாக!..**

ரேமா




**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**

நியாயாதிபதிகளின் ஆட்சிக்காலத்தில் களங்கமற்ற தூய்மையான அன்பிற்கும் கபடற்ற பரிசுத்தத்திற்கும், பக்திக்கும் நேராக வண்ண ஒளி வீசிய ஓர் துணிவும் துடிப்புமிக்க ஓர் பெண்மணியின் வரலாறு தான் நம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்குகின்றது. **தேவனோடும் தேவனுடைய பிள்ளைகளோடும் சினேகம் கொள்ளவும் அவர்களோடே ஐக்கியப்படவும் அன்பு பாராட்டவும் தனது ஜாதி, உறவுகளையும், பாரம்பரியங்களையும் உதறி எறிந்துவிட்டு வந்த ஓர் புறஜாதி (மோவாபிய) பெண்மணி தான் இந்த ரூத்.**

நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்து வரும் நாட்களில் விசுவாச சீர்கேடு, போர் (யுத்தம்), ஒழுக்க சீர்குலைவு, அக்கிரமம் என்பவை தலைவிரித்து ஆடிய மிக கொடிய காலத்தில் தேவ கட்டளைகளையும் அவரது நடத்துதலையும் மிகத்துணிச்சலுடனும் நிதானத்துடனும் பின் பற்றிய ரூத் இறுதியில் **பக்தியுள்ள ஒரு நேர்த்தியான சந்ததியை ஏற்படுத்த தேவனால் பயன்படுத்தப்பட்டவளாகும்.**

ரூத்தில் காணப்பட்ட நற்பண்புகளை நாம் ஆராய்வதன் மூலம் வாழ்விற்கு அவைகள் பெரிதும் பயனுள்ளதாகவும் தேவநாமம் தூசிக்கப்படாமல் மகிமையடையவும் அனேகர் கிறிஸ்துவின் செயலைக் கண்டு பக்திவிருத்தியடைய ஏதுவாகவும் அமையும்.

**அவளுடைய பெயரின் அர்த்தம் - ரியூத் என்ற எபிரெயச் சொல்லின் திரிவுபட்ட வடிவமே ரூத் என்ற பெயர். ரூத் - நட்பு/தோழி என்று பொருள்படும்.**

## படி-01 உம்முடனே கூட வருவோம் – ரூத் 1:10

ஓர்பாளும் ரூத்தும் இந்த தீர்மானத்தை செய்வதை காணலாம் நகோமி யோடுகூட நகோமி விட்டுவந்த அவளது சொந்த இடமாகிய யூதா தேசத்திற்கு செல்வதற்கு **தேவன் ஜனங்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று கேள்விப்பட்டு (ரூத் 1:6) புறப்பட்டு போகும்படி எழுந்தாள்.** அப்போது ரூத் எடுத்த தீர்மானம் தான் **உம்முடைய ஜனத்தண்டைக்கே உம்மோடேகூட வருவோம்.**

உன்னுடைய வாழ்க்கையிலும் யாரோடு கூட செல்ல தீர்மானிக் கின்றாய் என்பதனை மிக கவனமாகவும் உன்னிப்பாகவும் (விழிப்பாக) தீர்மானம் செய்து கொள். ஆரம்ப படியில் மிக தெளிவாக நில், என்ன தான் வந்தாலும் என்னுடைய தேவைகள் சந்திக்கப்படாமல் போனாலும் என்ன ஆனாலும் தேவனையும், தேவஜனத்தையும் பின் செல்ல தீர்மானிப்பாயா? ரூத்தின் வாழ்வில் முறிவும், மரணமும், தவிப்பும், தோல்வி போல பெரும்பாரம் அவளை அமிழ்த்தும் வண்ணமாக இருந்த போதும் கூட தான் பின்பற்ற தீர்மானத்ததில் உறுதியாயிருந்தாள்.

## படி-02 ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொண்டாள் – ரூத் 1:14

ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டு திரும்பிப்போனாள். **முதல் படியில் அனேகர் பின்பற்றவும் (சரியான தீர்மானங்களை) தீர்மானித்தாலும் அடுத்த அடுத்த படிகள் மிகவும் ஆழமாகவும் கிரயம் செலுத்த வேண்டியதாகவும் இருக்கும்.** அதிலே அனேகர் விட்டுவிட வாய்ப்பு உண்டு. நகோமி தன்னுடன் வந்தால் என்ன ஏற்படும் என்பதனை சற்று தெளிவுபடுத்திய போது ஓர்பாளால் அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் தனது பழைய வாழ்வுக்கும் தேவனற்ற காரியங்களுக்கும் திரும்பி போய்விட்டாள். மாமிசப்பசிக்கு தீனி போடவும் கண்களின் இச்சைக்கும், லௌகீக சம்பந்தமான உறவுகளுக்கும் களியாட்டும் வெறியும் தேவனற்ற சினேகிதத்துக்கும், தன் மிகுதியாயி ருந்த காலத்தை தாரைவார்த்து விட்டாள். **மிகவும் முக்கியமான ஒரு தேவை, அது என் வாழ்வில் சந்திக்கப்படாமல் போனாலும் என் இயேசுவோடு நான் நடப்பதிலிருந்து என்னைப் பிரிப்பது எது?**



**யார்? என்று ரூத் தீர்மானித்தாள்.** ஒன்றும் அவளை திசை திருப்ப முடியவில்லை. காரணம்: **தேவன் மீதும் தேவ மக்கள் மீதும் கொண்ட அன்பும், விசுவாசமும்.**

படி-03

## நீயும் திரும்பிப்போ – ரூத் 1:15

ஒர்பாள் போய்விட்டாள். ரூத்தே நீயும் போய்விடு, போய்விடு,



தயவு செய்து போகும் படி அவள் யாரை பின்பற்ற தீர்மானித்து முதல் இரண்டு முடிவுகளையும் எடுத்தாளோ அந்த நபரே (நகோமி ரூத்துக்கு) சொல்லும் வார்த்தை தான் நீயும் திரும்பி உன் பழைய வாழ்க்கைக் கும். தேவர்கள் இல்லாத தேவர்களிடத்திற் கும் போய்விடு போய்விடு. இது நமக்கு எதை எடுத்துக் காண்பிக்கின்றது.

எனக்கு அருமையான தம்பி, தங்கையரே ஒரு ஆளமான சத்தியத்தை நீ கற்றுக்கொள்ள தேவன் விரும்புகின்றார். **உன் நம்பிக்கையும், உன் விசுவாசமும் முற்றிலுமாய் தேவனையும் அவருடைய சத்திய வசனத்தையுமே சார்ந்ததாக இருக்க வேண்டும். மனிதர்களை நம்பி நீ உன் தீர்மானத்தையும் உன் விசுவாசத்தையும் மறுதலிக்கவும் துரோகம் பண்ணவும் புறமுதுகு காட்டவும் வாய்ப்பு ஏராளமாயுண்டு.**

நகோமி எதனை ரூத்துக்கு கற்றுக்கொடுக்க விரும்புகின்றாள். **என்னிடம் ஒன்றும் இல்லை, என்னை நம்பி நீ வராதே! அந்த சிந்தையை நீ உனக்குள் வளரவிடாதே, அப்படியானால் நீயும் திரும்பி போய்விடு.** முக்கியமானதும் விலையேறப்பெற்றதும் என்னவென்றால் **விசுவாசத்தை தொடக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். எபிரேயர் 12:1**

எதிர்ப்புக்கள் வந்தாலும் பாடுகள் வந்தாலும் மீட்பரின் சித்தம் செய்ய தீர்மானி. ரூத் நகோமியை விடமால் பற்றிக்கொள்ளவும் பின்பற்றவும் தீர்மானித்திருந்தாலும் அதன் ஆழம் அவள் தேவன் மீது கொண்ட காதலாகும். அதுவே அவளை இறுதிவரை வழி நடத்தியது. நீயும் தீர்மானிப்பாயா? மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப்பிரிப்பதில்லை. **கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? ரோமர் 8:36**

படி-04

## கதிர்களை பொறுக்கி கொண்டு வருகிறேன் – ரூத் 2:2

ரூத் நகோமியுடன் இப்போது யூதேயாவுக்கு வந்து விட்டாள். **ஆனால் தன்னால் இயன்ற ஏதாவது ஒன்றை செய்வதற்கு யாரும் சொல்லாமலே தானாக தீர்மானிக்கின்றாள். கதிர்பொறுக்க**



செல்வேன் என்பதாக. ஆனாலும் அதை தனது மாமியாகிய நகோமிக்கு தெரியப்படுத்தி அவளின் அனுமதியுடனும் ஆசீர்வாதத்துடனும் தான் செயற்படச் செல்கின்றாள். தான் மாத்திரம் திருப்தியடைந்தால் போதாது தன்னைச் சூழ இருப்பவர்களும் தன்னால் பயனடைய வேண்டும் என்ற விருப்பமும் தாகமும் உடையவளாய் பனி, வெயில், குளிர், பசி, கஷ்டம் என்று பாராது ஓர் புதிய இடத்தில் வந்த பெண்மணி ரூத் கதிர் பொறுக்கிக் கொள்ள செல்கின்றாள்.

**அவளைத் தேவன் கண்டார். கையின் பிரயாசத்தை ஆசீர்வதித்து நன்மையாய் முடியப்பண்ணினார். தேவனிடத்தில் நீங்கள் எடுக்கும் தீர்மானங் களை செயற்படுத்த முன் முதல் மனிதர்களிடத்தில், வேதாகம வெளிச்சத்திலும் ஆராய்ந்து யோசித்து செயற்படுத்துவீராக. வேலையாக இருக்கலாம், படிப்பாக இருக்கலாம், திருமணமாக இருக்கலாம், வெளிநாட்டு பயணமாக இருக்கலாம், எதுவானாலும் தெரியப்படுத்து. நன்மையும் கிருபையும் என்னைப் பின் தொடரும் (சங்கீதம் 23:6)** தன்னுடைய வாழ்வு உபயோகமாக இருக்க வும் மற்றவர்கள் ஆறுதலடையவும் ரூத் விரும்பினாள்.

பஈ -05

## நீர் எனக்கு சொன்னபடி எல்லாம் செய்வேன் – ரூத் 3:5

வருடங்கள் அதிகரிக்க அதிகரிக்க ரூத் நகோமி மீது கொண்ட அன்பும், கீழ்ப்படிவும், உத்தமமாய் பின்பற்றும் காரியங்களும் அதிகரித் தன. மேட்டிமையும், பெருமையும், அகங்காரமும் கொள்ளவில்லை. மாறாக நீர் சொல்லுவதன்படி செய்வேன். இது எதனைக் காண்பிக்கின்றது. **தாழ்மையில் நம்மை நினைத்தவரை துக்கப்படுத்தாமல் நடந்து தேவதிட்டத்தை நிறைவேற்றுவதை தனக்கு கற்பித்தபடியெல்லாம் செய்தாள் ரூத். (ரூத் 3:6).**

சொல்வது மாத்திரமல்ல, அதனுடைய முழுமையான காரியம் எப்போது பூர்த்தியாகும் என்றால் அதற்கு செயல்வடிவம் கொடுத்து செய்யும் போது மாத்திரமே மற்றப்படி வீண் பேச்சு.

பஈ -06

## நீ குணசாலி என்பதனை ஊரார் எல்லாரும் அறிவார்கள் – ரூத் 3:11

**ரூத்தின் தீர்மானத்தின் உயர் நிலையானது தன்னைத்தானே புகழா மல் மற்றவர்களால் புகழப்படும் அளவுக்கும் நற்சாட்சிபத்திரம்.** அவள் ஊரார் எல்லா ராலும் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு அவளை வழி நடத்தி வந்தது என்றால் மிகையாகாது. காரணம் தேவனையும் தேவஜனத்தையும பின் பற்ற தீர்மானித்தது ஆகும்.



**உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு – லூக்கா 11:35**

**என் அன்பு சகோதரர்களே!**

**உங்களை யாரும் நேசிக்க வேண்டும் என்றால் அவர்களுக்கு இடம் கொடுங்கள். ஆனால் நீங்கள் இயேசுவை நேசிக்கும் இடத்தில் அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். அப்படி நீங்கள் கொடுப்பீர்கள் என்றால் நித்திய ஜீவனையே இழந்து விடுவீர்கள்.**



அன்பரின் அறுவடையில்.
போதகர் வேதநாயகம் சுமணன்.



# வினா விடை – 46



01. நடனம் பண்ணுகிற பெண்களை தங்களுக்கு மனைவிகளாக்கிக் கொண்டவர்கள் யார்?
02. தளவாடங்களிருக்கிற இடத்தில் ஒளிந்து கொண்டிருந்த ராஜா யார்?
03. கர்த்தருடைய ஆலயத்தில் ஆறு வருஷம் ஒளித்து வைக்கப்பட்டிருந்த ராஜகுமாரன் யார்?
04. கடற்கரை மணலைப் போல மிகுதியான தானியத்தை சேர்த்து வைத்தவன் யார்?
05. கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியை கர்த்தர் யாருக்கு கொடுத்தார்?
06. கர்த்தர் யாருடைய சுதந்தரத்தை வலுசர்ப்பங்களின் தாபரமாக்கினார்?
07. வலுசர்ப்பத் துரவைக் கடந்து போனவன் யார்?
08. ஏழு தலையுள்ள வலுசர்ப்பத்தைக் கண்டது யார்?
09. "வலுசர்ப்பங்களின் தலைகளை உடைத்தீர்" என வாசிப்பதெங்கே?
10. "மலைகளின் நிழலைக் கண்டு மனுஷர் என்று நினைக்கிறாய்" என்று சொன்னவன் யார்?








சாம்பல் என்பது எரிந்ததின் மிகுதி ஆகும். பொருட்கள் அல்லது மனிதர்கள் எதுவானாலும் எரிந்ததின் பிற்பாடு மிஞ்சும் சில பகுதிகளில் சாம்பல் மேலானது. இது சில வேளைகளில் அடையாளப் படுத்தப்படவும், அறிமுகப்படுத தப்படவும், சில நம்பிக்கைகளை உரு வாக்கவும், தடயங்களாகவும் பயன் படுத்தப்படுகின்றது.



சாம்பல் என்பது ஓர் துயரத்தின் வெளிப்பாடு என ஓர் ஆங்கில பழமொழி சொல்கின்றது. வேதாகமும் சாம்பல் ஓர் துயரத்தின் வெளிப்பாடு பற்றியும், வேதனைகள், கண்ணீர், ஆத்தும விசாரங் களின் மன எழுச்சியின் அடையாளம் என்றும் போதிக்கிறது. மனித வரலாற்று சரித்திரங்களும் எத்தனையோ எரிந்து சாம்பலாயின என உலக வல்லுநர்களும் எடுத்தியம்புகின்றனர். கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புக்களும், எதிர்கொண்ட சூழ் நிலைகளையும் சுமந்து கொண்டு வாழ்வுப் பாதையில் ஓடுவதென்பது மிகவும் பெலவீனமானது. இதுவும் ஓர் சாம்பல் போன்ற ஓர் அனுபவம் தான்.

எத்தனையோ மனிதர்கள் இன்று தாம் உயிரோடு மிஞ்சி இருப்பதே ஏன்? எங்களுக்கு வந்த துன்பத்தில், கண்ணீரில், தகாத முறை யில் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், உறவுகள் இறந்து போன போது, எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில், சொந்த வாழ்விடங்களை இழந்து, சொத்துக்களை இழந்து நிற் கும் போது நினைவெல்லாம் ஆட்கொள்ளும் ஓர் அபாய மணிச்சத்தம் "ஏன்?" என்பதே ஆகும்.



பிரியமானவர்களே நாம் இந்த நிலையிலே காணப்படுவோமானால் நம்மையும் மாற்ற, சிநேகிக்க, சந்தோஷப்படுத்த நம் சூழ்நிலையில் இருந்து வெளியே கொண்டு வர ஓர் வழிகாட்டி அவசியம்.

எம் மேல் தொடரும் வியாதிகள், முரண்பாடுகள், சாபங்கள், பாவங்கள், பிரிவினைகள், ...... இப்படியே சொல்லில் சொல்ல முடியாத நிலைகள் வரை போய் ஓர் சாம்பல் தூள் தான் நான் என்று நினைக்கும் அன்பரே! *காற்றில் பரவிவிடும் சாம்பலாய் ஏன்? நான் மாறினேன். நானும் எனது சந்ததியும் கூட இந்த நிலைதானே என எண்ணும் நண்பரே* **அந்த வழிகாட்டியிடம்** நீ சென்றால் அல்லது சொன்னால் உன் வாழ்வு மாறும். நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும் வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள் போலவும் பசும் பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்.

**"நான்" அவர்களுக்கு "சாம்பலுக்கு பதிலாக சிங்காரத்தையும்" கொடுப்பேன் என அந்த வழிகாட்டி கூறி நிற்கின்றார். யார் உன் சாம்பலான வாழ்வை மாற்றக்கூடியவர். அவர் தான் "கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து!" ஒரு முறை கையெடுத்துப்பார். உன் வாழ்வு மாறுவதைக் காண்பாய். வா! வா! இயேசுவண்டை வா!...**

## குறுக்கெழுத்துப் போட்டி - 43
## சரியான பதில் எழுதியவர்கள்

01. எச்.இவாஞ்சலின் - மானிப்பாய்
02. ஹ.விஜிதா - மானிப்பாய்
03. ஜீ.ஜீபிகா - மானிப்பாய்
04. சி.மாக்கிறட் - மீசாலை
05. ச.சரோஜா - மீசாலை
06. எல்.ஜோகேஸ்வரி - மீசாலை
07. நா.கஸ்தூரி - மானிப்பாய்
08. சி.லோகேஸ்வரி - மானிப்பாய்
09. க.பரிமளா - மானிப்பாய்
10. சி.கலா - மானிப்பாய்
11. சி.சாமுவேல்ஜெறில் - மானிப்பாய்
12. சி.பியூலா - மானிப்பாய்
13. பி.நேசமணி - மானிப்பாய்
14. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
15. ற.ஜஸ்ரீனா - ஊர்காவற்றுறை
16. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
. வி.நிதர்சன் - ஊர்காவற்றுறை
. வி.ஷர்மிளா - ஊர்காவற்றுறை
. எம்.அமலறீகா - ஊர்காவற்றுறை
). வி.கலியுகன் - ஊர்காவற்றுறை
21. து.கிரிசாந் - ஊர்காவற்றுறை
22. மா.ஜெயந்தி - மானிப்பாய்
23. தி.கலைக்குமரன் - புன்னாலைக்கட்டுவன்
24. து.கிருஷ்ணகுமார் - ஊர்காவற்றுறை
25. மா.தர்சினி - காரைநகர்
26. பா.கோமதி - காரைநகர்
27. ம.டயானி - பாண்டவெட்டை
28. பா.வதனி - காரைநகர்
29. பா.மோகன் - காரைநகர்
30. ப.மேரிசாந்தி - திருநெல்வேலி
31. பா.டிலானி - காரைநகர்
32. தி.ஜெகா - ஊமலங்காடு







**எபேசுவிலே தீமோத்தேயு ஊழியம்செய்கை**யில் தீத்து கிரேத்தா தீவில் ஊழியம்புரிந்து வந்தான். ***இந்த தீத்துவும் பிரச்சினைகளை எதிர்நோக்கியவனாக இருந்தான்.*** இதில் இருந்த சபைகளுக்கு தேவன் எதிர்பார்க்கும் தகமை யுள்ள தலைவர்கள் தேவை என்பது தெரி கிறது. ***சபைகளில் இருக்கும் ஒவ்வொருவரும் வைக்கப்பட வேண்டும்*** சுபாவத்தின் படி பார்க்கையில் கிரேத்தா தீவார் மத்தியில் ஊழியம் புரிவது மிகக் கஷ்டம். தீத்து 1:12-13.

***தீத்துவுக்கு இவர்களோடு வேலை செய்ய பொறுமையும் அன்பும் தேவையாக இருக்கின்றது.*** இந்த 1ம் அதிகாரத்தில் தீத்து நிறைவேற்ற வேண்டிய மூன்று பொறுப்புகளை பவுல் நினைவுபடுத்துகின்றான்.

## 01. தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கி: தீத்து 1:1–4

***இவ்விதமான ஒரு அறிக்கை ஊழியத்திற்கும் தேவனுடைய வார்த்தைக்கும் இடையில் இருக்கும் தொடர்பினைக் காட்டுகின்றது.*** அத்தோடு இப் பகுதியில் எழுதப்பட்டுள்ள நான்கு சொற்தொடர்களையும் அவதானிக்க வேண்டும்.

### I. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விசுவாசப்படி: தீத்து 1:3

***பவுலின் ஊழியம் தேவனுடைய வார்த்தையினால் ஆளப்பட்டது.*** பவுல் "தேவனின் அடிமை" இயேசுவினால் அனுப்பப்பட்டவன். ***இவனது ஊழியத்தின் நோக்கம் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்வதே.*** இந்த சத்தியத்தின் உடற்கூறு (Body of Truth) தேவனுடைய வார்த்தையில் அடங்கி இருக்கின்றது. ***இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்.*** இவர்களுக்கு விசுவாசம் உண்டாக வார்த்தை சொல்லப்பட வேண்டும்.

### II. தேவபக்திக்கேதுவான சத்தியம்: தீத்து 1:3

***இந் நிருபத்திலும் தேவபக்தி ஓர் முக்கியமான அம்சம்.*** சுவிசேஷத் தின் சத்தியம் வாழ்க்கையை அவ பக்தியில் இருந்து பரிசுத்த வாழ்க்கைக்கு நேராக மாற்றும்.*

### III. தேவனுடைய கட்டளையின்படி: தீத்து 1:4

***இந்த ஊழியம் தேவனுடைய கட்டளையின்படியே நடக்கிறது.*** மனிதனால் உண்டானது அல்ல.

### IV. பொதுவான விசுவாசம்: தீத்து 1:1

***'பொதுவான" எனக் கூறும் போது பொதுவாக வைத்திருப்பதையே அர்த்தப்படுத்துகின்றது.*** இந்த விசுவாசத்தை தேவனுடைய ஜனங்கள் அனைவரும் கொண்டிருக்கலாம். ***யூதா 3ல் பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம் எனக்கூறப்படுவதைக் காணலாம்.*** இந்தப் பொதுவான விசுவாசத்தில் இருந்து விலகும் எச் செயலும் தப்பானது. இதை சபைகளிலே சகிக்கக்கூடாது.

***இந்த நான்கு காரியங்களையும் பார்க்கையில் பவுல் தன் ஊழியத்தை தேவ வார்த்தையோடு சம்பந்தப்படுத்தியதை காணலாம்.*** அவனது அழைப்பும் பிரசங்கித்தலும் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்திலேயே தங்கி இருந்தது. ***இவன் தீத்துவும் இந்த உண்மையை பற்றிப்பிடித்து தன் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கு முக்கியமான இடம் கொடுக்க வேண்டும் என விரும்புகின்றேன்.*** போதகத்துவ நிருபங்களில் தேவனுடைய வார்த்தையை போதிப்பதைக் குறித்து பவுல் வலியுறுத்துகின்றான். ***எனவே உள்ளூர்ச் சபைகள் 'வேதாகம பாடசாலையைப்" போல தேவனுடைய வார்த்தையை கிரமமான முறையில் மக்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.***

## 02. தராதரம் உள்ள தலைவர்களை நியமித்தல்: தீத்து 1:5–9

***பவுல் தீத்துவைக் கிரேத்தா தீவில் விட்டதற்கு காரணம் உண்டு.*** குறைவாய் இருப்பதை ஒழுங்குபடுத்தும் படிக்கேயாகும். ***இப் பகுதியில் கூறப்பட்ட எத்தனையோ தகமைகளை 1தீமோத்தேயு 3:2–3ல் காணலாம்.*** இப்போ இங்கு கூறப்பட்ட இன்னும் மேலதிகமான 9தகமைகளில் பார்ப்போம்.

### I. விசுவாசமான பிள்ளைகளை உடையவன்: தீத்து 1:6

***சொந்தப் பிள்ளைகளையே ஆதாயப்படுத்த முடியாத ஊழியக்காரன் வெளியே எவ்வளவு சித்தி பெறுவான்.*** இதைத்தான் பவுல் 1தீமோத்தேயு 3:5லும் கூறுகின்றான். ***கிறிஸ்தவ ஜீவியமும் கிறிஸ்தவ சேவையும் முதலில் வீட்டில் தான் ஆரம்பமாக வேண்டும்.*** ஒரு ஊழியக்காரனுடைய வீட்டில் இருக்கும் பிள்ளை இரட்சிக்கப்பட்டதாக இருந்தால் மாத்திரம் போதாது.

***கீழ்ப்படிதலுக்கும் அர்ப்பணத்திற்கும் ஒரு முன் மாதிரியாக விளங்க வேண்டும்.*** தீத்து 1:6ன் படி துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பள்ளைகள் பேரெடுத்தால் தகப்பன் மூப்பனாய் இருப்பதற்கு தகுதி அற்றவனாகிவிடுகின்றான்.

## II. தேவனுடைய உக்கிராணக்காரன்: தீத்து 1:7

**உக்கிராணக்காரனிடம் சொந்தமாக எதுவும் இராது.** ஆனால் எஜமான் அவன் கையில் ஒப்புவிப்பதை சரியான முறையில் நிர்வகிப்பான். **வேதத்தில் காணப்படும் ஒரு பிரபல்யமான உக்கிராணக்காரன் யோசேப்பு ஆகும். ஆதியாகமம் 39:1–9.**

போர்த்திபாரின் காரியங்கள் மேல் அவனுக்கு பூரண கட்டுபபாடு இருந்தது. ஒரு **உக்கிராணக்காரனின் பிரதான குணாதிசயம் 'உண்மைத்துவம்'.** ஓர் உக்கிராணக்காரன் எஜமான் கையில் ஒப்புவித்ததை அவனது நன்மைக்காகவும் புகழ்ச்சிக்காகவுமே பாவிப்பான். **தன் சொந்த காரியங்களுக்கு அல்ல.**

## III. தன் இஷ்டப்படி செய்யாதவன்: தீத்து 1:7

**எப்போதும் தன் சொந்த வழியையே முன் வைப்பவன்.** தன் இஷ்டப்படி செய்பவன் யாரின் அபிப்பிராயங்களையும் கேட்கமாட்டான்.

## IV. முற்கோபமில்லாதவன்: தீத்து 1:7

## V. நல்லோர் மேல் பிரியமுள்ளவன்: தீத்து 1:8

**இதை நல்லது எதுவோ அதில் பிரியமாய் இருப்பது என்றும் சொல்லலாம். இது நல்ல மனிதரையும் உள்ளடக்கியுள்ளது.** அத்தோடு நல்ல புத்தகம், நல்ல இசை போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளது. **ஒரு மனிதன் நல்ல மனிதனாக இருப்பதற்கு காரணம் அவனிடம் நல்ல இருதயம் இருப்பதும், நல்ல காரியங்களை தன்னைச் சூழ வைத்திருப்பதுமே ஆகும்.**

உண்மையான அர்ப்பணமுள்ள ஒரு தேவனின் ஊழியக்காரன் தனக்கும் தன் குடும்பத்திற்கும் சபைக்கும் உதவாத, கூடாத காரியங்களோடு சம்பந்தம் வைத்திருப்பதை நம்புவது கடினமாக இருக்கும்.

## VI. நீதிமான்: தீத்து 1:8

**இவன் உத்தமத்தில் உருக்குலையாத நிலையில் இருப்பான்.** இப்படிப்பட்டவன் தான் கூறியபடி நடந்து, பிரசங்கம் பண்ணுவதை தன் வாழ்வில் கடைப்பிடிப்பான்.

## VII. பரிசுத்தமுள்ளவன்: தீத்து 1:8

## VIII. இச்சையடக்கம் உள்ளவன்: தீத்து 1:8

**சுயகட்டுப்பாடு என்பதுதான் பொருள்.** இது மனிதனின் பசிக்கும் செயலுக்கும் பொருந்தும்.

## IX. உண்மையுள்ள வசனத்தை நன்றாக பற்றிக்கொள்ளுகிறவன்: தீத்து 1:9

**உண்மை" எனும் பதம் பவுலுக்கு பிடித்த ஒன்று.** கர்த்தருடைய வார்த்தை நம்பக்கூடியதே. அது ஒரு நாளும் பொய் சொல்லாது. **வார்த்தை உண்மையுள்ளதாய் இருப்பதால் அதை உபதேசிப்போரும், பிரசங்கிப்போரும் உண்மையுள்ளோராய் இருக்க வேண்டும்.**

## 03. தப்பாக உபதேசிப்போர் வாயை அடக்க வேண்டும்: தீத்து 1:10–16

***ஆதி சபையில் தப்பாய் உபதேசிப்போர் எழும்ப அதிக காலம் எடுக்கவில்லை.*** எங்கெல்லாம் தேவன் உண்மையை விதைக்கின்றாரோ அங்கெல்லாம் பிசாசு பொய்களை விதைக்கின்றான். **இந்த தப்பாக உபதேசிப்போரைப் பற்றிய மூன்று உண்மைகளை இங்கு பவுல் குறிப்பிடுகின்றான்.**

### I. தனிப்பட்ட ரீதியில் அவர்கள் நிலை

***பவுலுக்கு இவர்களைப் பற்றி நன்மையாகச் சொல்ல எதுவும் இருக்க வில்லை.*** இவர்களால் தேவனுடைய வார்த்தைக்கும் தேவ ஊழியக்காரனின் அதிகாரத்திற்கும் அடங்கிப் போக முடியாது. ***இவர்கள் அடங்காதவர்கள். முரட்டாட்டம் பண்ணுவோர் எனவும் கூறலாம்.*** அதிகாரத்திற்கு தங்களை கீழ்ப்படுத்தாதவர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### இவர்கள் வீண் பேச்சுக்காரா

இவர்கள் தங்களது பொய்யான உபதேசத்தினால் மக்களை மயக்கு கிறார்கள். ***தாங்கள் சத்தியத்தை போதிப்பதாக சாதிப்பார்கள். ஆனால் தவறானதை சிறிது சிறிதாக ஊட்டுகிறவர்களே இவர்கள்.*** ஏனெனில் இவர்களே பிசாசினால் வஞ்சிக்கப்படுகின்றார்கள். இதனால் மற்றோரையும் வஞ்சிப்பார்கள். இவர்கள் உபதேசிப்போர் தகாதவைகள். ***இவர்கள் மாம்சத்திற்குரியோரும் உலகத்திற் குரியோரும் ஆகும்.*** 1. ஓயாப்பொய்யர், 2. துஷ்டமிருகங்கள், 3. பெருவயிற்றுச் சோம்பேறிகள் ***எப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பார்த்தீர்களா?***

ஆவிக்குரிய வாழ்வின் மேன்மையான சிலாக்கியங்களுக்காக வாழாமல் தங்களது சொந்த அபிலாசைகளுக்காகவே வாழ்ந்தார்கள். ***பவுலின் வார்த்தைப் பிரயோகத்தைப் பாருங்கள்.*** இவர்கள் சாதாரண பொய்யர் அல்ல ஓயாப்பொய்யர். ***இவர்கள் சாதாரண மிருகங்கள் அல்ல துஷ்டமிருகங்கள்.*** இவர்கள் சாதாரண சோம்பேறிகள் அல்ல பெருவயிற்றுச் சோம்பேறிகள்.

## II. அவர்கள் செய்தது

**இங்கு காண்பிக்கும் படம் தெளிவானது.** தப்பாக உபதேசிப்போர் வீடு வீடாகச் சென்று பொய்களைச் சொல்லி முழுக் குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுவார்கள்.

## III. ஏன் இதைச் செய்தார்கள்:

***இவர்களது முக்கிய நோக்கம் பணம் சம்பாதிப்பதே ஆகும்.*** "இழிவான ஆதாயத்துக்காக" அவர்கள் ***சபைக்கு ஊழியம் செய்யவில்லை. மாறாக தங்கள் பைகளை நிரப்பினார்கள்.*** ஏன் இதைப் பவுல் கூறுகின்றான். ***ஓர் உண்மையான ஊழியக்காரன் தன் சொந்த ஆதாயத்துக்காக ஊழியம் செய்யமாட்டான்.*** அவன் மற்றோர் விசுவாசத்திலே வளரவே ஊழியம் செய்வான். ***இந்த இழிவான ஆதாயத்தை தேடுவதற்கு பின்னால் இன்னுமோர் காரியம் மறைந்துள்ளது.***

தீத்து 1:15 இவர்களது புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாய் இருக்கும். ***ஒரு மனிதன் இரட்டை வாழ்க்கை வாழும் போது இதுதான் நடக்கும்.*** வெளிப்பிரகாரமாக மரியாதையைக் கோருவர். உள்ளேயோ சீரழிந்து போவர். ***எந்த மனிதனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது.*** இந்த ஏமாற்றுக்காரர் இழிவான ஆதாயத்தின் மேல் உள்ள ஆசையினால் தப்பானதைப் போதித்து தப்பான வாழ்க்கை வாழ்வார்கள். ***இதன் விளைவு அசுத்தமான புத்தியும் மனச்சாட்சியும். இது இவர்களை உணர்த்தாது.***

தீத்து 1:15 தங்களது அவபக்தியான நடத்தையை நியாயப்படுத்த சிலர் பாவிப்பது உண்டு. இதைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ***இந்த மூன்று காரியங்களையும் கூறிய பவுல் தீத்து என்ன செய்ய வேண்டும் எனவும் கூறுகின்றான்.*** தீத்து 1:9 ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்ல வேண்டும்.

**முற்றும்.**

**(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)**

அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு,
தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்யப்
பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி,
நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.

தீத்து 2:14


# அருட்பணியாளர் சரிதை
## கிளீசன் லெட்யார்ட்
தொடர்ச்சி....

மூன்றாவது நாள் காற்று வீசுவது ஓய்ந்தது. மேகம் சூழ்ந்திருந்த வானம் இப்போது தெளிவடைந்தது. ஆகவே கிளீசன் அவர்களுக்கு சூரியனை வைத்துக்கொண்டு திசையினை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. எனவே



அவர் தனது முகாமில் இருந்து மிகவும் விரைவாக வெளியேறி விமானத்தை இயக்கி பறக்க ஆரம்பித் தார். அதிக நேரம் பறத்தலில் ஈடுபட்ட பின்னர் அவரால் விமானத்திலி ருந்து பேக்கர் நதியைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அது அவருக்கு மாபெரும் உதவி யாக இருந்தது. இறுதியாக அவர் அதன் மூலம் வரைபடத்திலுள்ள தன் இடத்தைக் கண்டுகொண்டார். சில மணித்தியாலங் களின் பின்னர் அவர் தனது மிஷனரித்தளத்தை வந்தடைந்தார். அது அவருக்கு மாபெரும் சந்தோஷத்தைக் கொடுத்தது.

**இத்தகைய கடினமான சோதனையிலும், அவரது கடின முயற்சி அவருக்குப் பயனுள்ளதாயிருந்தது.** அவர் அதனால் சிறப்பான ஓர் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார். **வந்த காலம் முடிவடைந்த பின் ஏரிகளில் ஐஸ்கட்டிகள் இல்லாத நேரத்தில் முதற்தடவையாக ஜீவனுள்ள வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ளத் தேவன் கிருபை செய்தார். இயேசு என்ற பெயரை முன்னர் ஒரு போதும் கேட்டிராத அக் குழுவினர் மத்தியில் முதலாவதாக கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை தந்தார்.** இதற்கு முன் அவர்கள் இயேசுவின் பெயரை அறிந்திருக்க வில்லை. கடந்த காலங்களில் அவர்களோடு தொடர்பிலிருந்த வெள்ளையர்களி னால் இயேசு என்பது சபிப்பதற்குப் பயன்படும் பெயர் என்றே அறிந்திருந்தனர். இத்தகைய கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள மக்களை நான் இதுவரை கண்டதேயில்லை என்கிறார் கிளீசன். அந்தச் சமயத்தில் ஆண்கள் மீன்பிடிக்கச் செல்லாலும், வேறெந்த அவசியமான தொழி லையும் செய்யாமல் இருந்தார்கள். நான் அவர்களை ஒரு கூடாரத்திற்கு முன்பாக



கூடிவரச் செய்து நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைக ளையும் மறுபடியும் அவர்கள் திருப்பிக் கூறும்படி செய்தேன். ஒரு சில காரியங்கள் விளங்காமல் இருந்தால்

**நெடுந்தொலைவிலுள்ள தற்காலிக கூடாரங்களுக்குப் பறந்து சென்று நற்செய்தியைப் பிரசங்கிப்பதே கிளீசனின் பிரதான ஊழியமாயிற்று.** எனினும் அவருடைய விமானமோட்டும் முயற்சியின் திறமையின் மூலம் அவர் இன்னும் சில பணிகளையும் சிறப்பாக செய்தார். தொலைதூரத்திலிருந்து மருத்துவ உதவி தேவைப்படும் மக்களுக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதுடன், அவருடைய மனைவியின் மிஷன் பாடசாலையின் கற்பவர்களுக்கும் போக்கு வரத்து உதவிகளைச் செய்து கொடுத்தார். அன்றியும் அவருடைய உதவியாட்க ளையும் ஆபத்தினின்று விடுவிக்கும் பணியினையும் அவர் செய்தார். வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் ஒரு விமானியும் ஐந்து பயணிகளும் தங்களுடைய பணிக்காகச் சுரங்கத்துக்குச் செல்லும் வேளை ஒரு விசாலமான நிலப்பரப்பில் காணாமற் போனார்கள். அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியா விட்டாலும் வயலர்ஸ் மூலம் முகாமிலுள்ளவர்களுடன் தொடர்பு வைத்திருந்த னர். காலநிலை காரணமாக அரசாங்கம் தேடுகை நடாத்தத் தாமதமானது.

எனினும் கிளீசன் பனி மற்றும் காற்றின் அபாயத்தின் மத்தியிலும் துணிந்து செயற்பட்டார். அவரது வீரச்செயல் காரணமாகவும், கடினமான தேடுதலின் விளைவினாலும் அவ் விமானியையும் பயணிகளையும் சிலநாட்கள் கழித்து கண்டுபிடிக்க முடிந்தது. இத்தகைய கடின முயற்சிகளின் காரணமாக கிளீசன் அவர்கள் சமயப்பற்று அற்ற அந்த முகாமிலிருந்த மனிதர்களினால் மிகவும் மதிக்கப்பட்டார். சில மாதம் கழித்து அவர் திரும்பி வந்த போது அவர்கள் நன்றிகளை ஏராளமாக வெளிப்படுத்தினார்கள். அது அவரைப் பரவசமடையச் செய்யது. அவர் தரையிறங்கிய போது அவருடைய பழைய நண்பர்களைச் சந்தித்து போன்ற உணர்வு ஏற்பட்டது. நாம் வெகுவிரைவில் ஒரு மாலைப் பொழுதில் கூட்டம் ஒன்றை நடாத்துவதாக அங்கே அறிவித்தோம். அங்கிருந்த அநேகர் கலந்து கொண்டார்கள். அவர்கள் கையில் அநேக வருடங்காளப் பாடுவதற்கு ஒரு பாட்டுப் புத்தகம் கூட இருக்கவில்லை. நாங்கள் அவர்களை சிறிது உற்சாகப்படுத்தியவுடன் அவர்கள் முழு மனதோடும் பாடல்களைப் பாடினார்கள். அப்போது நான் இயேசுவின் இரத்தத்தைப் பற்றியும் அவர் நமக்காக என்ன செய்தார், அவரால் நமக்கு என்ன பயன், அவர் எவ்வாறு நமக்கு உரித்துடையவர் என்பது பற்றியும் விபரித்து கூறினேன். அப்போது அவர் எங்குமே பார்த்திராதவண்ணம் அவர்கள் முகத்தின் பிரதிபலிப்பு தெளிவாக தென்படத் தொடங்கியது. அந்தக் கூடுகை முடிந்த பின்னர் எம்மோடு பேசுவதற்காக அநேக நபர்கள் எமக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆர்டிக் பகுதியில், நீண்ட காலமாக நற்செய்திப் பணியைச் செய்தா லும் அது குறிப்பாக எஸ்கிமோக்களின் மத்தியிலே, பயனற்றதாகவும், உற்சாகமற்ற தாகவும் காணப்படுவதை லெட்யாாட் கண்டார். மக்கள் வெளியரங்கமாக நட்பு ரீதியாக பழகுபவர்களாகவும், அவர்களது ஊழியத்தை ஏற்றுக்கொள்பவர்க ளுமாக இருந்தாலும் அவர்கள் நீண்ட காலமாக வைத்திருந்த விக்கிரக வழிபாடுகளையும் மூட நம்பிக்கைகளையும் விட்டுவிட விருப்பமில்லாதவர்க ளாக இருந்தனர். வேறொரு பிரச்சனைக்கும் அவர்கள் முகம் கொடுத்தார்கள். **சுவிசேஷப் பணிகுறித்தும், இரட்சிப்பைக் குறித்தும்**

அதை நிறுத்தி மீண்டும் சொல்வேன். அவர்கள் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவுடனே அதைத் திரும்பவும் கூறினார்கள்.

**தவறான கணிப்பை அவர்கள் முன்னர் வந்திருந்த மிஷனரிகளி னால் பெற்றிருந்தனர். ஒரு சிலருக்கு கிறிஸ்தவம் அறிமுகமாகி இருந்த போதும் அவர்கள் சடங்காச்சார கிறிஸ்தவத்தையே பின்பற்றினர். உண்மையான மன மாற்றம் அங்கு காணப்பட வில்லை.** ஞானஸ்நானம் பெறுவதைக் குறித்த தவறான மனப்பாங்கு, சமய உறுதிப்படுத்தல் போன்ற சமயச்சடங்கு, காலையும் மாலையும் ஒரே ஜெபத்தை மறுபடியும் மறுபடியும் உச்சரித்தல் போன்ற கிறிஸ்தவத்திலுள்ள தவறான அபிப்பிராயங்களை உடைப்பது கடினமான காரியமாயிருந்தது.

**லெட்யார்ட் அநேக நேரங்களில் பெற்றுக்கொண்ட சன்மானம் என்ன வெனில், நற்செய்தியின் வல்லமையால் மூடநம்பிக்கை போன்ற கிறிஸ்தவத்தின் தடைகளை மேற்கொள்வதற்கு வல்லமையைப் பெற்றுக் கொண்டதாகும்.** அவருடைய மிஷனரித் தளத்திலிருந்து நூற்றுக்கணக்கான தொலைவிலுள்ள இத் தீவின் ஒரு கிராமத்தில் ஒரு குருத்தோலை ஞாயிறு காலை நேரத்தில், அவர் பேசும் போது அங்கு ஓர் எழுப்புதல் உண்டானது. அந்தக் கிராமத்திலுள்ள



மக்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மீது நம்பிக்கையை வைத்தனர். எனினும் அந்தச் சமயத்திலும் அந்த எஸ்கிமோக்கள் முகங்கொடுக்க வேண்டியதான சோதனைகளில், குறிப்பாக, மூட நம்பிக்கைளிலிருந்து திரும்பிய அவர்கள், அநேக காலமாக உரிய ஊழியர் இல்லா மல் தனித்திருக்கும் போது அதன் விளைவுகளைக் குறித்து லெட்யார்ட் மிகவும் அவதானமாக இருந்தார். "**அவர்களு டைய வெளிப்பிரகா ரமான செயல்கள், கவனத்தை ஈர்ப்பவை, எனினும் இறுதிவரை அவர்கள் உரிய பலன் கொடுப்பார்களா? நாம் அவர்க ளின் எண்ணிக்கை யைக் குறித்துப் புத்தகங்கள் எதையும் வைத்திருக்கவில்லை**" என கிளீசன் இப் பயணத்தைக் குறித்து எழுதினார். இன்னுமொரு சுவிசேஷப் பயணத்தின் பின், "**இந்த எஸ்கிமோக்களில் ஒரு சிலராவது பரலோகத்தில் இருப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். ஏனென்றால் தேவன் என்னுடைய பயணத்திலே கிரியை செய்துள்ளார்**" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லெட்யார்ட் அவர்கள், எண்ணிக்கைத் தொகையில் அதிகமாகக் கவனம் செலுத்தாதது போல் எஸ்கிமோக்கள் மத்தியில் அமெரிக்க கிறிஸ்தவத்தை கொண்டு செல்வதிலும் எந்த வித கரிசனையும் கொள்ள வில்லை. "**கிறிஸ்தவ சபைகளைக் குறித்து அவர் கரிசனை கொள்ளவில்லை. ஆனால் கிறிஸ்துவை மாத்திரம் அறிவிப்பதில் கரிசனை கொண்டார.** இது அந்த தொலை தூரத்திலுள்ள ஆர்ட்டிக் வேஸ்லேண்ட் பகுதியின் மக்களுக்கு உண்மையான கிறிஸ்தவத்தினை அறிந்து கொள்ள வாசலைத் திறந்து கொடுத்தது.

(இவ் வாழ்க்கைச் சரிதை, ரூத்.ஏ.டக்கர் எழுதிய "எருசலேமிலிருந்து இரியன் ஜயாவுக்கு" எனும் நூலிலிருந்து பெறப்பட்டு ஒ[illegible]க்கப்பட்டது)

# அருவி

## முத்துக்கள்

தேவனைவிட்ட
மனிதர்கள்
தேசாந்திரிகள்

வரங்கள் கனிகளின்
தரிப்பிடம்
ஜெபபலிபீடம்

விடியாத இரவுகள்
என்பது
அறிக்கையிடாத பாவங்கள்

அந்தரங்கங்களையும்
அறிவிப்பது
அபிஷேகம்

விசுவாசிகளின்
பெருமூச்சு
இடைவிடாத ஜெபம்

நான் யார் என்பதே
கிறிஸ்தவத்தின்
பேருண்மை

மனதுகளை மண்டியிட
வைப்பது
மன்றாட்டு

சத்தியத்தை நீ பேசு
அதனால்
சத்துருவானாலும் நேசி

ஜெபங்களின்
மகிமை
தேவபிரசன்னம்

வளங்கள் அல்ல
வல்லமை
தாழ்மையே வல்லமை



# தொடர்ச்சி... அனலின் ஆன்மீக விருந்து

# தேவனுடைய சமூகத்தில் மௌனமும் உண்மையான உபவாசமும்

கடந்த அனலில் பிரசுரிக்கப்பட்ட "தேவனுடைய சமூகத்தில் மௌனமும் உண்மையான உபவாசமும்" எனும் தலைப்பில் போதகர் சுஜித் (இந்தியா) அவர்களால் பகிர்ந்து கொள்ளப்பட்ட செய்தியின் தொடர்ச்சி இம் மாத அனலில் பிரசுரிக்கப்படுகின்றது.

**நாங்களோ அனேக தடவைகள் ஆண்டவரே உம்மை நம்புகின்றேன் என்று சொல்வோமே தவிர என்னை நம்பும் என்று ஒரு நாளும் சொன்னதில்லை.** அப்பொழுது அந்த நபர் ஒரு காரியத்தைக் கண்டார். அது என்னவென்றால் ஒரு வெள்ளை வஸ்திரம் தரித்த ஒரு நபர் அவளை நோக்கி அவளின் அருகாமையில் செல்வதனை அவதானித்தார்.

வேறொரு நபர் சொன்னார்: கர்த்தரின் குல்மான் எனக்கு அருகாமையில் செல்கின்ற போது அது கர்த்தரின் குல்மான் அல்ல அங்கே இயேசுவே செல்கின்றார். அந்த தேவ பிரசன்னத்தையும், தேவ கிருபையையும் அவள் சுமந்து சென்றாள். இறுதியில் அந்த தேவமனிதன் கேட்டார் அம்மா தயவு செய்து சொல்லுங்கள்: என்ன இரகசியம் இருக்கின்றது. அனேக தடவைகளில் தான் செய்வதனை இந்த தேவமனிதன் அவதானிக்கின்றார் என்று கர்த்தரின் குல்மான் கண்ட போது அவள் அந்த தேவமனிதனைப் பார்த்து சொன்னார்: **என் அருமை சகோதரனே, தேவனுடைய பிரசன்னத்தில் உபவாசித்துக் கொண்டிருக்கும் போது ஆயிரம் தடவைகளுக்கு மேல் கர்த்தரின் குல்மான் மரித்துப் போய்விட்டாள். அவள் மரித்தபடியினாலே தான் இயேசு இருக்கின்றார்.**

நான் உபவாசிக்கின்ற போது ஆண்டவரிடம் கேட்கின்றேன்: **ஆண்டவரே நான் உபவாசிக்கின்ற போது என்னுடைய சுயம் சாகவேண்டும், நான் சாகவேண்டும்.** நான் உங்களுக்கு கூறவிரும்புகின்ற காரியம்: இன்றைய விசுவாசத்தைக் குறித்தும் நீங்கள் எதையும் செய்யலாம், அதைச் செய்யலாம், இதைச் செய்யலாம் என்று அனேகர் போதிக்கிறார்கள், கற்றுக் கொடுக்கின்றார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புகின்றேன், உங்களுடைய வாழ்க்கையைப்பார்த்து சொல்லுங்கள்: நீ எதையும் செய்யலாம், ஆனால் நீ ஒன்றும் இல்லை என்று சொலகின்ற போது தான் தேவனுடைய ஆவியானவர் உன்னிடத்தில் வருவார். எனக்குத் தெரியும் ஆண்டவருடைய கிருபையும், பிரசன்னமும் உங்களை நோக்கி வரும் போது நீங்கள் பலப்படுவீர்கள் என்று சொல்வீர்கள். ஆகவே இன்றைக்கு நாங்கள் சொல்ல வேண்டிய ஒரு காரியம் பிதாவே நான் என்னைத தாழ்மைப்படுத்தி என் வாழ்க்கையின் சுயத்தைச் சாகடிக்கிறேன். உம்மை என் மீது வெளிப்படுத்தும் என்று சொல்லுங்கள். **இன்றைக்கு சபை போதகர்மார், ஊழியர்கள், விசுவாசிகள் ஏன் பின்வாங்கியிருக்கின்றார்கள் என்று ஓர் ஆராய்ச்சி செய்தார்கள். தேவன் மீது சார்ந்திருப்பதனை அவர்கள் இழந்து விட்டார்கள். தேவன் மீது தங்கி சார்ந்தி ருப்பதனை இழக்கின்ற கணத்திலே அவர்கள் பின்வாங்குகிறார்கள்.**

**எபிரேயர் 5:7 அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ள வரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,** எனக்கு விருப்பமான வசனம். ஒவ்வொரு தடவையும் தன்னுடைய தகப்பனும் பிதாவுமானவருக்கு முன்பாக ஒவ்வொரு ராத்திரியும் இயேசு கிறிஸ்து கதறி அழுதவண்ணம் இருந்தார். எப்பொழுதுமே பிதாவிலே தங்கி இருந்தார். **லூக்கா 22:44 அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.** இயேசு கிறிஸ்து கொடூர சிலுவைக்கு போகும் முன்பதாக என்ன செய்தார் என்பதனை குறித்து மிக அழகாக சொல்லுகின்றது. அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது.

**யோவான் 14:12 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.** யாரெல்லாம் என்னில் விசுவாசம் வைக்கின்றார்களோ, அவர்கள் என்னைப பார்க்கிலும் அதிக காரியங்களைச் செய்வார்கள். இயேசுவைப் போல அற்புதம் செய்ய வேண்டும் என்றால் இயேசுவைப் போல ஜெபிக்கவும்,

உடைக்கப்படவும் வேண்டும். **யோவேல் 2:17 கர்த்தரின் பணி விடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது: கர்த்தாவே, நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டுப் புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும் உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக.** லேவியருடைய வேலை மண்டபத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே அழவேண்டும். ஏனென்றால் புறஜாதிகளுக்குள்ளே தேவனுடைய நாமம் தூசக்கப்படக்கூடாது. இலங்கையிலே தேவனுடைய நாமம் தூசிக்கப்படக்கூடாது என்பதற்காக யாழ்ப்பாணத்தில்இருக்கின்ற சபை தேவனை நோக்கி அழ வேண்டும். எங்களிடம் இருக்கின்றதான பிரச்சனை என்ன வென்றால் நாங்கள் எங்களைக் குறித்து அதிகமாக யோசித்து எங்க ளுடைய பெயர் பழுதாய் போகக் கூடாதென்று யோசிக்கின்றோமே தவிர தேவனுடைய பெயரைக் குறித்து யோசிப்பதில்லை.

நான் இந்தக் காரியத்தை செய்வதினாலே தேவனுடைய பெயர் நிந்திக்கப்படுகின்றது என்று எத்தனை பேர் யோசித்திருக்கிறீர்கள். நான் யாரையும் குற்றம் சாட்டவரவில்லை. **இயேசு யாரையும் குற்றம் சாட்ட வரவில்லை. நாங்கள் மனந்திரும்ப வேண் டும், உடைக்கப்பட வேண்டும் என்று வந்தார்.** இயேசு ஜனங்களுக்கு முன்பாக எப்பொழுதும் கடினமாக பேசினார். அவர் பரிசேயரை அதட்டினார். ஆனால் எப்பொழுதெல்லாம் அவர்கள் அவரிடமாய் தனிமையாய் பேச வரும் போது இயேசு அவர்களை நேசித்தார். நிக்கோதேமு இயேசுவை நோக்கி வருகின்ற போது வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, பரிசேயனே என்று அவர் பேசவில்லை. அது தான் இயேசுவின் அன்பு!. **ஆகவே நான் சொல்ல விரும்புவது நீங்கள் உபவாசிக்கும் போது இயேசுவிலே அதிகமாக தங்கி வாழ வேண்டும். தேவனுடைய பிரசன்னத்திலே எவ்வளவு அதிகமாய் தங்கி இருக்கின்றீர்களோ அவ்வளவு அதிகமாய் ஐக்கியம் வளரும்.**

நீங்கள் அவரிலும் அவர் உங்களிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். உங்களுடைய வாழ்க்கையை இயேசுவுக்குள்ளே காண்பீர்கள். நீங்கள் அதைப் புரிந்து கொண்டு ஆண்டவரைப் பார்த்து ஆண்டவரே நான் உமக்கு சொந்தமானவன், நீர் எனக்குச் சொந்தமானவர் என்று சொல்வீர்கள். ஐக்கியம் இன்னும் அதிகமாய் வளர்கின்ற போது ஒரு கருத்தை அழுத்தமாக சொல்லவிரும்புகின்றேன். **ஐக்கியம் மிகவும் ஆழமாய் வளர்கின்ற போது தேவனுடைய தரிசனங்களையும், வெளிப்பாடுகளையும் பெற்றுக் கொள்வீர்கள்.** **நான் இந்தியாவில் இருந்து இலங்கை வருவதற்கு முன்பாக விமான நிலையத்தில் இருந்து என்னுடைய ஆவிக்குரிய தகப்பனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனக்காக ஜெபிக்குமாறு கேட்டேன். அவர் சொன்னார் நான் இப்போது ஜெபத்திலே இருக்கின்றேன். இந்துப் பின்னணியைச் சேர்ந்த ஒரு**

**13வயதை உடைய சிறு பெண் இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வருவதனைக் குறித்து ஒரு தரிசனம் கண்டாள். அவர் சொன்னார். நீ போய் ஆண்டவருடைய வருகை யைக் குறித்து சொல்லு என்றார்.**

ஐக்கியத்தில் இணைந்து தரிசனங்களையும், வெளிப்பாடுக ளையும் காண்கின்ற போது இரண்டு காரியம்நடைபெறும். ஒன்று **வெளியான பார்வை,** இரண்டாவது **உள்ளான தரிசனம்.** ஏசாயா தேவனை நோக்கி மேலே பார்த்து பரிசுத்தர் என்று அழு கின்றான். உடனடியாக உள்ளுக் குள்ளே தரிசனத்தைக் கண்டான். இந்த உபவாசத்திலே உங்களு டைய வாழ்க்கையிலே தேவபிரசன் னம் வருகின்ற பொழுது மேலே தேவனை நோக்கி தரிசனத்தைக் காண்கின்ற போது உங்களுடைய உள்ளான நிலை என்ன என்பதனை தரிசனமாய் காண வேண்டும். தற்கால ஜனங்களிடத்தில் நான் காண்கின்ற பிரச்சனை என்னவென்றால்: அவர்கள் தரிசனம் ஒன்றை காண்கின்ற பொழுது இரண்டாவது அவர்கள் சொல்கின்ற காரியம் தேவன் என்னை ஊழியத் திற்கு அழைக்கின்றார் எனவே நான் போகின்றேன். ஆனால் உண்மையில் இரண்டாவதாக எங்களுடைய உள் ளான நிலையில் நான் யார் என்று கண்டு கொள்ள வேண்டும். ஏசாயா உடனடியாக தான் யார் என்று தன்னு டைய உள் ளான தரிசனத் திலே பார்த்த பொழுது அவன் **ஆண்ட வரைப் பார்த்து ஐயோ! நான் அதமானேன்** என் றான். தன்னை யார் என்று கண்ட அக் கணத்திலே ஆண்ட வர் அவனைப் பார்த்து பேசினார். ஆண்டவர் ஊழியத் தைக் குறித்து பேசினார். **யார் நமக்காய் போவான்?** அந்தக் கணத்திலே தான் தன்னுடைய வெளியான தரிசனத் தைக் கண்டு கொள்கின்றான்.

வெளியான தரிசனத்திலே ஊழியம், நிறுவனங்கள், பாடசாலை போன்றவற்றை ஜனங்கள் காண் பார்கள். இயேசுவுக்காக செய்யக் கூடிய எல்லாவற்றையும் காண்பார் கள். இந்த ஐக்கியத்தோடு அழுகிற தான ஒரு தேவமனுஷனுடைய கதறல் என்னுடைய போதகர் திடீரென்று ஒரு காரியத்தைக் கண்டார். இயேசு வந்து ஒரு ஜெப விண்ணப்பத்தைக் கொடுத் தாராம். அந்தப் போதகரோடு இயேசு கிறிஸ்து தன்னுடைய இருதயத்தைப் பகிர்ந்தார். **என்ன ஜெப விண்ணப்பம் என்றால் பிதாவே உம்முடைய குமார னாகிய கிறிஸ்துவின் திருமணத்தை வேகமாக்கும். அது எப்பொழுது நடை பெறப்போகின்றது. அதை சீக்கிரமாக் கும். அது யாரோடு நடைபெறப் போகின்றது. அந்த திருமணம் யாழ்ப் பாணத்தின் மணவாட்டிகளோடு தான் நடைபெறப்போகின்றது. ஏனென்றால் அவர்தான் மணவாளன்.**

நாங்கள் இந்தப் பூமியிலே எங்கள் மணவாளன், மணவாட்டிக ளோடு எப்படி சந்தோஷமாய் களிகூறு கின்றோமோ அதே போல் எங்களு டைய பரம மணவாளனோடு களிகூறு வது இல்லை. இயேசுவை உங்களு டைய மணவாளனாக புரிந்து கொள் வீர்களாக இருந்தால் அது உங் களைப் பரசவப்படுத்தும்.

தாவீதின் வாழ்க்கையை வாசித்துப் பார்த்தால் அவனுடைய ஆத்துமா ஆண்டவர் மேல் தாகமாயிருந்தது. தாவீதின் அடுத்த படியாக அவனுடைய வாழ்க்கையை அவதானித்தால் **சங்கீதம் 42:5 என் ஆத்துமாவே, நீ ஏன் கலங் குகிறாய்? ஏன் எனக்குள் தியங்கு கிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத்துதிப்பேன். சங்கீதம் 84:2 என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப் பிர காரங்களின் மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது.** உங்களுடைய ஆத்துமா தேவனை நோக்கி காத்திருப்பது அது வித்தியாசமானது இல்லை. ஆனால் உங்களுடைய மாம்சமும் தேவனை நோக்கி கதறுவது வித்தியாசமானது. ஆனால் விசுவாசிகளாக எங்களுடைய வாழ்க்கையின் பிரச்சினை என்னவென்றால் எங்களுடைய ஆத்துமா தேவனுடைய காரியங்களில் வாஞ்சையும் தவனமுமாய் இல்லாததின் நிமித்தமாக வேறு.

அனேக காரியங்களில் எங்க ளுடைய மாமிசம் வாஞ்சையும் தவனமா யிருக்கின்றது. இன்றைக்கு நீங்கள் தேவனை நோக்கி கதற வேண்டும். ஆண்டவரே என்னுடைய மாம்சமும் உம்முடைய வருகைக்காய் காத்திருக்கின்றது. இந்த சபையானது இந்த தராதரத்திற் குள்ளே நுழைகின்ற போது ஆண்டவரை நோக்கிய வாஞ்சையும் அற்புதமான காரியங்களும் நிகழலாம். என்னுடைய ஆண்டவருக்கு

அடுத்ததாக நான் சிறுபிள்ளை களை அதிகமாக நேசிப்பேன். என்னுடைய நண்பனுடைய மகளில் எனக்கு அதிக பிரியம். அவள் ஒரு சின்னப்பிள்ளை. அவளோடு சில நேரங்களில் இருக்கும் போது விளையாடுவேன். நான் கதிரையைச் சுற்றி ஓடுவேன். அவளும் ஓடி வருவாள். சில வேளைகளில் என்னைப் பிடிப்பதற்காக அவள் ஓடிவருவாள். சில வேளை நான் தன்னைப் பிடிப்பதற்காக ஓடிவருகின்றேன் என்று அவள் நினைப்பாள். சில வேளைகளில் நானும் அவளுக்கு பின்னே ஓடிப்போவேன். அவள் நான் தான் அவரை ஓடிப்பிடிக்கின்றேன் என்று அவள் நினைப்பாள். ஆனால் உண்மை என்னவென்றால் நான் அவளைப் பிடிக்க ஓடுவேன். அவள் ஓடிக்கொண்டேயிருப்பாள். இறுதியில் அவள் ஓட முடியாமல் களைத்துப்போய் இருக்கின்ற போது நான் ஓடிச்சென்று அவளைத் தூக்கி கட்டியணைத்து முத் தமிடுவேன். அது ஒரு மகிழ்ச்சியான வேளை.

இப்படித்தான் தேவனோடும் எங்களுடைய உறவு. **நீங்கள் ஜெபத்திலே இதே போல் தேவனிடம் வருகின்ற போது தேவன் உங்கள் மேல் வாஞ்சையாயிருப்பார்.** அவர் உங்களைப் பிடிக்க வேண்டும் என்று வருகின்றார். ஆனால் நீங்கள் அவரை பிடிப்பதாக யோசிப்பீர்கள். ஆனால் உண்மை என்னவென்றால் அவர் உங்களைப் பிடிக்கும்படியாக ஓடி வருகின்றார். ஏனென்றால் அவர் தான் உங்களை உருவாக்கினார். நீங்கள் அவரை உருவாக்கவில்லை. ஆகவே உங்களிலே தன்னுடைய பிரியத்தை வைக்க விரும்புகின்றார். இப்படி ஜெபத்தில், தேவனுடைய பிரசன்னத்திலே நுழை

வீர்களாக இருந்தால் உங்களுடைய ஜெபம் ஒரு நாளும் வீணானதாய், பொழுது போக்காய், நேரம் சென்ற தாய் இருக்கமாட்டாது. மாறாக மிகவும் உற்சாகமுள்ளதாய் இருக்கும்.

**தேவன் தன்னுடைய மகிழ்ச்சியை உங்களிலே காண்பார். இந்த சபைக்காக தேவன் எனக்குள் கொடுத்த வார்த்தை என்னவென்றால் ஒரு காரியத்தை சொன்னார்: இந்த ஜனங்களுக்குச் சொல், அவர்களுக்கு பின்னால் அலைந்து திரிகின்றேன். ஏனென்றால் அவர்களை நான் அதிகமாக நேசிக்கின்றேன். என்னுடைய வாஞ்சை என்ன வென்றால் சபை, மூலமாகத்தான் நான் வெளிப்பட வேண்டும். ஆண்டவர் தருகின்ற தரிசனம் என்ன வென்றால் கிறி ஸ்து இந்த சபை மூலமாக வெளிப் படவேண்டும். இந்த தரிச னத்தை, தேவனுடைய வாஞ்சையை நீங்கள் பற்றிப்பிடிப்பீர்களாக இருந்தால் இந்த சபை, விசுவாசிகள், ஊழியர்கள் எழுப்புதலைக் கண்டுகொள்வார்கள். ஆகவே இந்த உபவாசத்திலே நீங்களும் நானும் ஆண்டவரை நோக்கி அழப்போகின்றோம். ஆண்டவரே நான் மரிக்க வேண்டும். நீர் மகிமைப்பட வேண்டும்.**

ஒரு மணவாட்டியாக ஆண்டவரைப் பார்த்துக் கேட்போம். இந்த உறவு நிலையை நீங்கள் பெறுகின்ற போது கிறிஸ்துவின் குணாதிசயங்கள் உங்களிலே வெளிப்படும். நான் எங்கே போனாலும் இதைச் சொல்லு வேன். ஆவியில் எளிமையுள்ளவாகளாயிருங்கள். இன்றைக்கு இருக்கின்ற விசுவாசிகளின் பிரச்சனை என்னவென்றால் எங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது. அவர் ஒரு மணித்தியாலம் அந்நிய பாஷையில் பேசினால் நான் இரண்டு மணித்தியாலம் அந்நிய பாஷை பேச வேண்டும். அந்தப் போதகர் பிரசங்கிபபதனைப் பார்க்கிலும் நான் இன்னும் அதிக நேரம் பிரசங்கிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் பெயரையும் அவருடைய முக்கியத்துவத்தையும் உணரா மல் இதனைத்தான் நானும் வைததிருந தேன். இயேசு கிறிஸ்து உங்களுடைய இருதயத்தில் வரும் போது ஒருவரை ஒருவர் கனப்படுத்தி ஒரு வரை ஒருவர் மேன்மைப்படுத்து வீர்கள். யாரும் உங்களைப் பார்த்து அந்தப் போதகரைப்பார்க்கிலும் நீங்கள் மேலானவர் என்று சொன்னால் நீங்கள் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்வீர்கள். ஆனால் இருதயத்தில் அந்த வேதமனிதனைப் பார்க்கிலும் நீங்கள் அருவருப்பானவர்என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

**இன்றைக்கு சபையில் இருக்கும் மிக பெரிய பிரச்சனை சுயநீதி. ஆனால் இயேசு கிறிஸ்து சுயநீதியை அழிக்கும்படியாக வந்தார்.** நீங்கள் சிலுவைக்கு போகும் படியாக அழைக்கப்பட்டவர்கள். நாற்றம் நிறைந்த சுயம் சிலுவைக்கு போகவேண்டும். இயேசு கிறிஸ்துவின் நறுமணம் எங்களுக்கு சுகந்த வாசனையாக

வ° ச வேண்டும்.
விசுவாசிகளை அல்ல எங்கள் மூலமாய் மற்றவர்கள் இயேசு வைக் கண்டு கொள்வார்கள். **உங்க ளுக்கு தெரியுமா? எழுப்புதல் ஒருவ ரைக் கொண்டு சுற்றி சுற்றி வராது. அது கிறிஸ்துவின் சரீரத்தை சுற்றித் தான் வரும். நீங்களும் நானும் அப்ப டிப்பட்ட வயலிலே வேலை செய்கிறவர் களாய் இருக்கின்றோம்.** அது சீயோன் விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல, இலங்கையில் உள்ள மற்ற விசுவாசி கள், மற்ற சபையாருக்காகவும் நான் உமக்கு முன்பாக கதறுகின்றேன் அவர்களை மன்னிப்பீராக. அவர்கள் விபச்சாரம் செய்தார்கள் என்று இல்லை, நான் விபச்சாரம் செய்தேன், அந்த ஜெபத்தைத்தான் பவுலும் செய்தார். ஆண்டவரே நான் சாபமாய் மாறிவிட்டேன். இது என்னத்தைக் குறிக்கின்றதென்றால் அவர்கள் பரலோகம் போனா[illegible] நான் நரகம் போகின்றேன். அது தான் இருதயம்.

அந்த இருதயம் தான் மோசே, நெகேமியாவுக்கும் இருந்தது. பாவிக ளோடு எங்களையும் ஒப்பிட்டு அடையா ளப்படுத்தும் காரியத்தை படிப்போ மென்றால் ஆண்டவரே என்னைப் பார்த்து அவர்களை மன்னியும் என்று ஆண்டவரைப் பார்த்து கதறுவீர்கள். அதைத்தான் இயேசுவும் செய்தார். ஆண்டவரே என்னைப் பார்க்கிறீரே இந்த ஜனங்களை மன்னியும். நாங்க ளும் இதே பாணியில் நடக்க அழைக் கப்பட்டிருக்கின்றோம். ஆகவே நாங் கள் தேவனுக்கு முன்பாக பணியிட்டு சுயம் என்னில் சாகட்டும் என்று சொல் லுவோம்.

**இவ்வளவு நாளும் மார்த்தாளைப் போல அதையும் இதையும் செய் தேன். மரியாளைப் போல உம்மைத் தேடவில்லை என்று சொல்லுவோம். தானியேல் போல் ஜெபித்திடும் பல தாசர்கள் மறைந்து போனார்கள். திறப்பின் வாசலிலே நிற்க வேண்டிய பலர் தூங்கிக் களைத்துப் போனார் கள். என்னுடைய மாம்சம் உம்மை வாஞ்சிக் கின்ற அளவுக்கு என்னை ஒப்புக் கொடுக்கின்றேன். உபவாச குறைவுகளை மன்னியும் என்று ஆண்டவரிடத்தில் சொல்லுவோம். எங்கே குற்றங்களை உணர்ந்து கதறுகின்றார்களோ அங்கே எழுப் புதல் வரும்.** எங்கே விழுந்திருக்கின் றோம் என்பதனை உணர்ந்தால் அங்கே எழுப்புதல் வரும். உமக்கு முன்னே நான் வருகின்றேன் என்னை மன்னியும் என்று சொல்லுவோம். உண்மையான ஜெபத்தில் மொழி இல்லாமல் வார்த்தை இல்லாமல் போகலாம். ஆனால் ஒரு சொட்டுக் கண்ணீர் தேவனுடைய இருதயத்தை மாற்றும். அவருடைய வருகை மிகவும் சமீபமாயிருக்கின்றது. **நன்றி**

**முற்றும்.**

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**சுவிசேஷகா சுஜித்**

**இந்தியா.**



# குறுக்கெழுத்துப்போட்டி – 44






## இடமிருந்து வலமாக

1. தம்மை விசுவாசிக்கும் .... இரட்சிப்பைக் கொடுக்க இயேசு போதுமானவர்.
4. தேவன் இப்படிப்பட்ட வல்லமையுள்ளவர் (ர்/ரு)
6. சிம்சோன் இதை அரைத்தான்



## வலமிருந்து இடமாக

5. ஆண்டை இப்படியும் சொல்லலாம்
6. இந் நேரத்தில் துன்பம் வந்தாலும் காலையில் சந்தோஷம் உண்டாகும்.
7. இயேசு எமக்காய் இதனை அடைந்தார்



## மேலிருந்து கீழாக

3. சகேயு இப்படிப்பட்டவன்
2. பெத்தானியாவைச் சேர்ந்தவன்

## கீழிருந்து மேலாக

8. தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக எந்த ....... உம் வாய்க்காதே போகும்.
9. பிள்ளை சாவதை நான் பார்க்கமாட்டேன் என்று இது பாயும் தூரம் போய் அழுதாள் ஆகார்.




# குறுக்கெழுத்துப் போட்டி – 43 சரியான பதில்கள்

*இடமிருந்து வலமாக*

01. பிலேயாம்
05. கோராகு
06. அன்பு (ன்அபு)
07. ஏனோக்

*மேலிருந்து கீழாக*

02. யாக்கோபு
01. பிலமோன்
08. அக்சாள்
09. அண்டை

*வலமிருந்து இடமாக*

04. சாத்ராக்
03. நாவு
10. தேவனுடைய

*கீழிருந்து மேலாக*

07. ஏகுத்
04. சாவு
11. வலை

# வினாவிடை – 45 சரியான பதில்கள்

01. யோனத்தான் (1சாமுவேல் 14:27)
02. ரூத் (ரூத் 2:14)
03. சிதேக்கியா (11இராஜா. 25:7), சிம்சோன் (நியாயாதி.16:21)
04. அம்மோனியனாகிய நாகாஸ் (1சாமுவேல் 11:1-2)
05. தாவீது (சங்கீதம் 17:8)
06. யாக்கோபு (உபாகமம் 32:9-10)
07. சகரியா 3:9
08. வெளிப்படுத்தல் 5:6
09. ரூத் (ரூத் 14:18-20)
10. மெல்கிசேதேக்கு (எபிரேயர் 7:1-7)

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர் :-........................................

விலாசம் :-........................................

........................................

........................................

........................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

To: ..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**